**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 261/2024

Prosecution PW 4

Deposition of Witness for Defence

Court

Name : சஞ்சீவ் குமார்

Father's Name : வைரம்

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 23.02.2026.

**எதிரி ஆஜர்.**
**முதல் விசாரணை**

நான் இரண்டு வருடங்களுக்கு முன்பு வெள்ளியணையில் குடியிருந்து வந்து, தற்போது காந்திகிராமத்தில் குடியிருந்து வருகிறேன். 2 வருடங்களுக்கு முன்பு அமிர்தம் பால் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தேன். தற்போது பெங்களூர் சட்டக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வருகிறேன். கடந்த 06.11.2023 ம் தேதி ராஜேஸ்வரி மளிகைக் கடைக்கு அருகிலுள்ள அமிர்தா பால்

நிறுவனத்திற்கு காலை சுமார் 08.30 மணிளவில் வந்தேன். ராஜேஸ்வரி மளிகைக் கடையில் தக்காளி வாங்க வந்த ஜானகி என்பவர் கத்திக் கொண்டே செயினை அறுத்து போவதாகவும், பிடிங்க என்று சத்தம் போட்டுக் கொண்டு வந்தார். அந்த அம்மாவிடம் விசாரித்தபோது இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்ததாகவும், அதில் ஒரு நபர் செயினை பறித்ததாகவும் கூறினார். அதன் எடை சுமார் 5 பவுன் செயின் என்று கூறினார். பின்னர், கரூர் நகர காவல் நிலையம் சென்று புகார் கொடுப்பதாக கூறினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சி குவிமுச பிரிவு 161 க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பகுதி பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

போலீஸ் விசாரணையில் கடந்த 06.11.2023 ம் தேதி ராஜேஸ்வரி மளிகைக் கடைக்கு பால் பாக்கெட் போட சென்றபோது ஜானகி என்ற பெண்ணிடம் செயினை பறித்த நபரை பிடிக்க முற்பட்டபோது அவர் தள்ளிவிட்டு சென்றதாகவும் சொல்லிவிட்டு தற்போது சம்பவத்தை மட்டும் கூறிவிட்டு, தற்போது நான் யாரையும் பார்க்கவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 261/2024

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 5 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | ஜெயமணி |
| Husband's Name | : | செந்தில் குமார் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 23.02.2026.

**எதிரி ஆஜர்.**
**முதல் விசாரணை**

நான் எல்ஆர்ஜி நகர் ராஜேஸ்வரி மளிகைக் கடைக்கு அருகில் வசித்து வந்து இல்லத்தரசியாக வீட்டில் இருந்து வருகிறேன். வந்து, தற்போது காந்திகிராமத்தில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் சோபனா என்பவர் கையொப்பம் செய்தார். கடந்த 06.11.2023ம் தேதி சோபனா

வீட்டின் முன்பு காலை சுமார் 10.00 மணியளவில் கரூர் நகர போலிசார் ராஜேஸ்வரி மளிகைக் கடை செயினை பறித்தது சம்மந்தமாக கரூர் நகர போலிசார் சம்பவ இடம் வந்து விசாரணை செய்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அதற்காக சம்பவ இடத்தில் நானும், சோபனாவும் பார்வை மகசரில் கையொப்பம் செய்து கொடுத்தோம். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

புகார்தரரை எனக்கு 12 வருடங்களாக தெரியும். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். பார்வை மகசரில் உள்ள விவரங்களை நான் படித்து பார்த்தேன். காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

CC.NO.261/2024

**எதிரி ஆஜர்.**

**அ.சா.1, ஜானகி, க/பெ. செல்வராஜ், எம்.பி.எண். 1 /2026, தேதி 23.02.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

காலை 07.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றது. காலை 09.30 மணிக்கு நான் புகார் கொடுத்தேன். சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே 2 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால் சரிதான். புகாரை இன்ஸ்பெக்டர் எழுதினார். எழுதிய புகாரை இன்ஸ்பெக்டர் படித்து காண்பித்தார். அதன் பிறகு நான் கையொப்பம் செய்தேன். நான் கொடுத்த புகாரில் செயினை பறித்தவரின் வயதை குறிப்பிட்டு கூறினேனா என்றால் இல்லை. செயினை பறித்த நபரின் உருவ அடையாளங்களை குறிப்பிட்டு கூறினேனா என்றால் இல்லை. அறுத்து சென்ற செயினின் மீதி செயினின் அளவை நான் எவ்வாறு தெரிந்துகொண்டேன் என்றால் பாதி செயின் இருந்ததால் 5 பவுனில் பாதி 2 1/2 என்று தெரிந்துகொண்டேன். என்னுடைய நகைதான் என்பதற்கு ஆதாரமாக ரசீது எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எதிரிகள் இருவரும் தலையில் குல்லா போட்டு வந்தனர். போலிசார் விசாரணையில் சொன்னதைத்தான் நீதிமன்ற விசாரணையிலும் சொல்கிறேன் என்றால் சரிதான். செயினின் மாடல் பற்றி நான் புகரிரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சிசிடிவி கேமராக்கள் இருந்தது. எதிரியை காண்பித்து நான் சிறையில் ஏதேனும் அடையாளம் காட்டினேனா என்றால் நீதிமன்றத்தில்தான் நான் அடையாளம் காட்டினேன். சிறையில் அடையாளம் காட்டவில்லை. அடையாள அணிவகுப்பிற்கு போலிசார் என்னை

அழைக்கவில்லை என்றால் சரிதான். செயினை பறித்தபோது எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. நான் சொல்வது போல எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அவ்வாறு சம்பவம் நடைபெறாததால்தான் நான் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலிசார் போட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./—எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

CC.NO.261/2024

**எதிரி ஆஜர்.**

**அ.சா.3, மாகராஜா, த/பெ. சிவனாண்டி, எம்.பி.எண். 1 /2026, தேதி 23.02.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

போலிசார் விசாரணையில் சொன்னதைத்தான் நீதிமன்ற விசாரணையிலும் சொல்கிறேன் என்றால் சரிதான். காலை 07.45 மணிக்கு சம்பவம் நடைபெற்றது. புகார் கொடுக்க அ.சா.1 எத்தனை மணிக்கு சென்றார் என்றால் எனக்கு தெரியாது. அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர் என்றால் இரண்டு வீடுகள் தள்ளி அ.சா.1ன் வீடு உள்ளது. போலிசாருக்கு தகவல் நான் கொடுத்தேனா என்றால் எனது மகள் தகவலல் கொடுத்தார். செயினை பறித்தபோது அ.சா.1க்கு காயம் ஏற்பட்டதா என்றால் நான் பார்க்கவில்லை. சம்பவம் என் முன்தான் நடைபெற்றது. நான் போலிசார் விசாரணையில் எதிரிகளின் வயதைப் பற்றி குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் வயது 35 முதல் 37 வயது இருக்கும் என்று கூறியுள்ளேன். நான் போலிசார் விசாரணையில் எதிரிகளின் உருவ அளவை பற்றி குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. அதனால்தான் மேற்குறிப்பிட்ட விவரங்களை போலிசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. எனது கடைக்கு பக்கத்தில் அமிர்தம் பால் ஏஜென்சி உள்ளது என்றால் சரிதான். அமிர்தம் பால் ஏஜென்சியில் உள்ள

சஞ்சீவ் குமார் சம்பவத்தை பார்த்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகார்தாரர் எனது கடைக்கு பக்கத்து வீட்டில் உள்ளவர் என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**